உ
சிவமயம்

# திருக்கேதீச்சரத் தேவாரத் திருப்பதிகங்கள்



வித்துவ சிரோன்மணி ஸ்ரீமத் ந.ச. பொன்னம்பலபிள்ளை
அவர்கள்
செய்த உரையுடன்

வெளியீடு:
சைவ பரிபாலனசபை
யாழ்ப்பாணம்.
2002.

ரூபா. 15.00

செல்வன் - இரத்தினகுமார் இரமணன்

உ
சிவமயம்

# திருக்கேதீச்சரத் தேவாரத் திருப்பதிகங்கள்



வித்துவ சிரோன்மணி ஸ்ரீமத் ந.ச. பொன்னம்பலபிள்ளை
அவர்கள்
செய்த உரையுடன்

வெளியீடு:
சைவ பரிபாலனசபை
யாழ்ப்பாணம்.
2002.

### திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்
### அருளிச் செய்த
# திருக்கேதீச்சரத் தேவாரத் திருப்பதிகம்



*பண்: நட்டராகம்* *இராகம்: பந்துவராளி*

*திருச்சிற்றம்பலம்*

விருது குன்றமா மேருவி னாணர வாவன லெரியம்பாற்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளுங்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டங்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே. - 01

*(இ.ள்) திரிபுரத்திலுள்ளோர்கள் தாங்கொண்ட வெற்றி கெட மகாமேரு வில்லாகவும், சேஷன் நாணாகவுங் கொண்டு சுடுகின்ற அக்கினியாகிய அம்பினாலே போர்செய்து அவற்றை அளித்த சிவபெருமான் விரும்பி வீற்றிருக்கும் இடமாக எந்நாளும் நினைக்கப்படுகின்ற ஊராகிய முழங்குகின்ற கடல் சூழ்ந்த வாசனை கமழுஞ் சோலைசெறிந்த மாதோட்டத்திலே எவரும் மதிக்கும்படி உள்ள திருக்கேதீச்சரமென்னுந் தலத்தை வணங்க. அங்ஙனம் வணங்கினோரைத் தீவினைகள் சேரா.எ-று.*

பாடல் வீணையர் பலபல சரிதைய ரெருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ் சுண்டிருள் கண்டத்தர்
ஈடமாவது விருங்கடற் கரையினி லெழிறிகழ் மாதோட்டங்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே. - 02

(இ-ள்) பாடுகின்ற வீணையை உடையவரும், பலபல ஒழுக் கத்தை உடையவரும், தருமதேவதையாகிய இடபத்தைச் செலுத்திப் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்கிற ஐந்தொழிலாகிய அரிய நடனத்தை விரும்புகின்ற வரும், தேவர்கள் முறையிட நஞ்சையுண்டு இருண்ட கண் டத்தையுடையவருமாகிய சிவபெருமானுக்கு இடமாவது பெரிய கடற்கரையிற் பொருந்திய அழகு விளங்குகின்ற மாதோட்டத்தி லுள்ள கேடில்லாத திருக்கேதீச்சர மென்னுந்தலமாம். அதனை வணங்கி எழ வருத்தத்தைச் செய்யுந் தீவினைகளெல்லாங் கெடும். எ-று.

தமக்கென ஓரொழுக்கமில்லாராயினும் ஆன்மாக்களுக்கரு ளுமாறு பற்பல ஒழுங்குகளை மேற்கொண்டமையிற் பலபல சரிதையர் என்றும், பயன்றராவேனை நடனங்கள் போலாகாது ஆன்மாக்களை முத்தியிற் சேர்த்தலாகிய பெரும் பயன்றரும் நடனமாதலின் அரு நட்டமென்றுங் கூறினார்.

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையின ரறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ண மாதரித் தாடுவர் பாடுவ ரகந்தொறு மிடுபிச்சைக்
குண்ண லாவதோ ரிச்சையி னுழல்பவ ருயர்தரு மாதோட்டத்
தண்ண னண்ணுகே தீச்சர மடைபவர்க் கருவினை யடையாவே. - 03

(இ - ள்) தமது திருவருளாகிய சக்தியை ஒரு பாகத்திலு டையவரும், சுத்த ஞானமாகிய இளம்பிறை தவழும் சடையை யுடையவரும், நான்கு வேதங்களாகிய வீரக்கழலும் சிலம்பும் ஒலிக்க விபூதியை விரும்பி அணிபவரும், பற்பல கீதங்களைப் பாடுகின்றவரும், நிரீச்சுர வாதிகளாகிய முனிவர்களுக்கு ஈசன் ஒருவர் உண்டென்னும் உண்மையைப் புலப்படுத்தும் அருள் காரணமாக அவர்கள் வீடுகள் தோறும் இடுகின்ற பிச்சையை உண்ணவேண்டு மென்னும் விருப்பமுடையவர் போலச் சென்ற வரும் ஆகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற உயர்ந்த மாதோட் டத்திலுள்ள திருக்கேதீச்சர மென்னுந் தலத்தை அடைபவர் களைத் தீவினையடையா. எ - று

பொடிகொண் மேனியர் புலியத ளரையினர் விரிதரு கரத்தேந்தும்
வடிகொண் மூவிலை வேலினர் நூலினர் மறிகடன் மாதோட்டத்
தடிக ளாதரித் திருந்தகே தீச்சரம் பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்ந்தடி பேணவல் லார்தம்மேன் மொய்த்தெழும்
வினைபோமே - 04

*(இ-ள்.) விபூதியை அணிந்த திருமேனியை உடையவரும், புலித்தோலை உடுத்த அரையை உடையவரும், விரிந்தகையி லேந்துகின்ற கூரிய இச்சை, ஞானம், கிரியை என்னும் முத்த லைச் சூலத்தையுடையவரும், உபவீதத்தை உடையவருமா கிய சிவபெருமான் விரும்பி வீற்றிருந்த திரைபொருகின்ற கடல் சூழ்ந்த மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரத்திலே அன்பு கொண்ட மனத்தையுடையராகித் தலைகளைச் சாய்த்து அப்பெருமானுடைய பாதங்களை வணங்கவல்ல தொண்டர் மேலே திரண்டெழுகின்ற தீவினைகள் கெடும்.* எ - று.

நல்ல ராற்றவு ஞானநன் குடையர்தம் மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர் மலிகடன் மாதோட்டத்
தெல்லை யில்புக ழெந்தைகே தீச்சர மிராப்பக னினைந்தேத்தி
அல்ல லாசறுத் தரனடி யிணைதொழு மன்பரா மடியாரே. -05

*(இ-ள்) மிகவும் நன்மையை உடையவரும், ஞானத்தை மிகவுடையவரும் தம்மையடைந்த அன்பர்களுக்கு அருளைச் செய்ய வல்லவரும், உலகத்திலுள்ள பெரிய பிறப்பிறப்பிலாத வரும் ஆகிய அளவிறந்த புகழையுடைய சிவபெருமானது வளங்கள் நிறைந்த கடல் சூழ்ந்த மாதோட்டத்திலுள்ள திருக் கேதீச்சர மென்னுந் தலத்தை இரவும் பகலுஞ் சிந்தித்துத் துதித்துத் துதித்து துக்கத்தை முழுதுங் கெடுத்து அப்பெருமா னது இரு பாதங்களையும் வணங்கும் அன்பர்களே சிவனடி யார் என்று சொல்லப்படுவர்.* எ - று.

*ஏனையர் அன்பராகாரென்பதாம்.*

பேழை வார்சடைப் பெருந்திரு மகடனைப் பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபா லருளிய பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழின் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீண் மார்பர்கே தீச்சரம் பிரியாரே. 06

(இ-ள்)பரந்து உயர்ந்த பெட்டிபோன்ற சடாமுடியிலே பெரிய கங்கையைப் பொருந்தும்படி வைத்து, ஒரு பாகத்தை அருட்சத்திக்குக் கொடுத்த கொள்கையை யுடையவரும் விஷ்ணுவாகிய பன்றியினது எயிற்றை அணிந்த மார்பையுடைய வருமாகிய சிவபெருமான், தமது இருப்பிடமாகிய வாழைச் சோலைகளிலே மந்திகள் மகிழ்ச்சிபெருக இருக்கின்ற மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சர மென்னுந் தலத்தை ஒரு காலத்தும் பிரியார். எ - று.

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல் லுலகினி லுயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர் பொழின்மஞ்ஞை நடமிடு மாதோட்டந்
தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்செய்கே தீச்சர மதுதானே. 07

(இ-ள்.) முற்காலத்திலே சனகாதி நால்வருக்குந் தரு மங்களை உபதேசித்தருளி, பலவுலகங்களிலுமுள்ள ஆன்மாக் கள் அத்தருமங்களை மேற்கொண்டொழுகும்படி செய்த சிவபெருமான் உலகத்துள்ளார் வணங்க விரும்பி வீற்றிருக்குங் கோயில், வண்டுகள் கீதங்களைப் பாடப் பூஞ்சோலைகளில் மயில்கள் கூத்தாடுகின்ற மாதோட்டத்திலுள்ள அடியார்கள் நாடோறும் தோத்திரஞ் செய்ய அப்பெருமான் அவர்களுக்குத் திருவருள் செய்கின்ற திருக்கேதீச்சரமென்னுந் தலமாம். எ - று.

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந் தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்ன லங்கெட வடர்த்தவற் கருள்செய்த தலைவனார் கடல்வாயப்
பொன் னிலங்கிய முத்துமா மணிகளும் பொருந்திய மாதோட்டத்
துன்னி யன்பொடு மடியவ ரிறைஞ்சுகே தீச்சரத் துள்ளாரே. 08

(இ - ள்) கைலாச மென்னும் மலையை வருந்தி எடுத்த தெற்கின்கணுள்ள இலங்கையிலுள்ளார்க் கரசனாகிய இராவணனுடைய தலைகளும் வலிய புயங்களும் தத்தம் நிலைகெட நெரித்துப் பின் அவன் வேண்டுதல் செய்ய அருள்புரிந்த முதல்வர், கடலின்கணுள்ள பொன்னும் பிரகாசிக்கின்ற முத்துக் களும் மாணிக்கங்களும் செறிந்த மாதோட்டத்திலுள்ள, சிந்தித்து அன்போடு மடியார்கள் வணங்குகின்ற திருக்கேதீச்சர மென்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே. எ - று.

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும் புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் னடியிணை காண்கிலா வித்தகமென்னாகும்
மாவும் பூகமுங் கதலியு நெருங்குமா தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத் திருந்தவெம் பெருமானே. 09

(இ - ள்) மாமரங்கள் கமுகுகளும் வாழைகளும் நெருங்கிய மாதோட்டமென்னும் நல்ல ஊரிலுள்ள திருக்கேதீச்சர மென்னுந் தலத்திலே நிலையாய கௌரியம்பிகை என்னும் அருட் சக்தியோடு வீற்றிருக்கின்ற நமது கடவுளே' பிரமாவும் விஷ்ணுவும் முறையே அன்னமும் பன்றியுமாய் மேலே பறந்தும் பூமியைக் கிழித்தும் தேடித் தேவரீருடைய முடியையும் அடியையுங் காண்கின்றிலர். அவர்களுடைய கடவுட்டன்மை எவ்வாறாகும்? எ - று.

புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர் புறனுரைச் சமணாதர்
எத்த ராகிநின் றுண்பவ ரியம்பிய வேழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட வுரிசெய்து போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே தீச்சர மடைமின்னே. 10

(இ - ள்) உலகத்தீரே, புத்தசமயிகளாகிய சில தைத்த வஸ்திரங்களை அணிபவரும், புறங் கூறிப் பலரை வஞ்சித்து நின்று புசிக்கும் சமணர்களாகிய மூடர்களும் போதிக்கின்ற அறியாமையாகிய போதனையைக் கேளாதொழியுங்கள். மதயானையை அஞ்சும்படி யுரித்து, அதன்றோலைப் போர்த்த

சகத் பிதாவாகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற மாதோட்டத் திலுள்ள பாலாவியென்னுந் தீர்த்தக்கரையி லிருக்கின்ற திருக் கேதீச்சரமென்னுந் தலத்தை யடையுங்கள். எ - று.

மாடெலாமண முரசெனக் கடலின தொலிகவர் மாதோட்டத்
தாட லேறுடை யண்ணல்கே தீச்சரத் தடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொ னவின்றெழு பாமாலைப்
பாடலாயின பாடுமின் பத்தர்கள் பரகதி பெறலாமே. 11

(இ - ள்) பக்கங்களிலெல்லாம் மணமுரசைப் போலக் கடலோசை பிறவோசைகளை அடக்கும் மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரம் என்னுந் தலத்தில் வீற்றிருக்கின்ற இடபாரூடராகிய சிவபெருமானைச் சீர்காழித் தலைவனாகிய திருஞான சம்பந்தன் பாடிய இப் பதிகத்தையே அன்பர்களே! நீங்கள் பாடுங்கள்; மோக்ஷத்தைப் பெற்றுக் கொள்ளலாம். எ - று.

நவின்று என்னும் வினையெச்சங்காரணப் பொருட்டு. மாதோட்டத்திலுள்ளார் விரகநோயுடையரன்றி என்றுஞ் சிவத் தியானஞ் செய்யுங் கற்சனராதலின் மண முரசெனக் கடலின தொலிகவர் மாதோட்டம் என்றும், வீரசக்தியாகிய விட்டுணுவே இடபமா தலின் ஆடலேறென்றுங் கூறினார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்
அருளிச் செய்த

# திருக்கேதீச்சரத் தேவாரத் திருப்பதிகம்



பண்: நட்டராகம் இராகம்: நாட்டை

திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்தனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்றிருக் கேதீச்சரத் தானே. 01

*(இ-ள்)* பாஞ்சசன்னியமென்னும் சங்கையேந்திய ஞானியாகிய விஷ்ணுவென்னும் இடபத்திலேறினவரும், மதத்தால் நனைகின்ற கதுப்புப் பொருந்திய வாயையுடைய யானைத் தோலை உரித்துப் போர்த்த நித்திய கல்யாணரும், இறந்த விஷ்ணு முதலியோர்களுடைய என்பு மாலைகளை அணிபவரும் யாவரென்றால் அன்பையுடைய அடியார் வணங்குகின்ற பாலாவியென்னுந் தீர்த்தக்கரையி லுள்ள திருக்கேதீச்சர மென்னுந் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே. எ - று.

ஐம்படைகளுட் சங்கமும் ஒன்றாதலின், நத்தார் படையென்றும், தமோகுண வயத்தராய் என்றுந் துயில் புரிவோர் போலாகாது என்றுஞ் சிவயோக துயில்புரியு மகா ஞானியாதலிற் பசுவாய்த் தாங்கும் பேறடைந்த பெரியர் என்பார், நத்தார்படை ஞானன்பசு என்றுங் கூறினார். பத்தாகிய தொண்டர் என்பதற்குச் சிவபுண்ணியம் பத்தையும் உடைய தொண்டர் என்றலும் ஒன்று. பசு ஏறுதலும் யானையுரிபோர்த்த

லும் எலும்பணிதலும் தாமே முழுமுதற் கடவுள் என்பதற்கேது வாய் நின்றன. மணவாளன் என்பதும் உடம்போடு புணர்த்த லால் அவ்வாறாயிற்று. மத்தம் - களிப்பு.

சுடுவார்பொடி நீறுந்நல்ல துண்டப்பிறைக் கீளுங்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாவுறை கின்றான்றிருக் கேதீச்சரத் தானே. 02

*(இ-ள்). விபூதியையும் இளம் பிறையையும் யானைத் தோலையும் அணிந்த நீலகண்டரும், உமாதேவியாரோடு பிரி யாதிருப்பவரும் யாரென்றால், பாலாவியென்னுந் தீர்த்தக் கரை யிலுள்ள திருக்கேதீச்சரமென்னுந் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவ பெருமானே. எ - று.*

*சுடுவார் என்பது சுடுதலார்ந்த என விரியும். ஏர் - உவம உருபு*

அங்கம்மொழி யன்னாரவ ரமரர்தொழுதேத்த
வங்கம்மலி கின்றகடன் மாதோட்டநன் னகரிற்
பங்குஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேற்
செங்கண்ணர வசைத்தான்றிருக் கேதீச்சரத் தானே. 03

*(இ - ள்.) இளம் பிறையைச் சூடினவரும் சிவந்த கண்க ளையுடைய சர்ப்பக்கச்சையை அணிந்தவரும் யாரென்றால் வேதவேதாங்கங்களையறிந்த பிராமணர்களும் தேவர்களும் வணங்கித் துதிக்கத் தோணிகள் நிறைந்த கடல்சூழ்ந்த மாதோட்டமென்னும் நல்ல ஊரிலுள்ள பாலாவியெனுந் தீர்த் தக் கரையிலிருக்கின்ற திருக்கேதீச்சரமென்னுந் தலத்தில் வீற் றிருக்கின்ற சிவபெருமானே. எ - று.*

*அங்கத்தை ஒழித்த அத்தன்மையனாய மன்மதனுந் தேவரும் வணங்க எனப் பொருள்கொண்டு மன்மதன் முற்காலத்தில் திருக்கேதீச்சரத்திற் பூசித்தான் என்பாரும் உளர்.*

கரியகறைக் கண்டனல்ல கண்மேலொரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயு மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்றிருக் கேதீச்சரத்தானே. 04

*(இ - ள்) நீலகண்டரும், நெற்றிக்கண்ணரும் அறிஞரா லறியப்படும் வேதத்தில் வல்லவரும் யாரென்றால், வண்டுகள் கீதங்களைப் பாடுகின்ற மாதோட்டமென்னும் நல்ல ஊரிலுள்ள பெரிய திரையை வீசிப் பெருகும் பாலாவியென்னுந் தீர்த்தக் கரையிலிருக்கின்ற திருக்கேதீச்சரமென்னுந் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே. எ - று.*

*கரியகறை என்பது கருங்கண்ணன் என்பதுபோல நின்றது.*

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடன் மாதோட்டநன் னகரில்
பங்கஞ் செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே. 05

*(இ - ள்) அடியார்களுக்குச் சரீரத்திலுள்ள நோய்களை நீக்கியருளுகின்றவர் யாவரென்றால், தமது இடப் பாகத்தி லுள்ள கௌரியம்பிகையென்னும் அருட்சத்தியோடு தோணி கள் நிறைந்த கடல் சூழ்ந்த மாதோட்ட மென்னும் நல்ல ஊரிலுள்ள பாலாவியென்னுந் தீர்த்தக் கரையிலிருக்கின்ற தென்னஞ் சோலை சூழ்ந்த திருக்கேதீச்சரமென்னும் ஸ்தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே. எ - று.*

*பங்கஞ்செய்த என்பதற்கு ஒரு பாகத்தை வேறுபடுத் திய எனினும் அமையும்.*

வெய்யவினை யாயவ்வடி யார்மேலொழித் தருளி
வையமலி கின்றகடன் மாதோட்டநன் னகரிற்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேற்
செய்யசடை முடியான்றிருக் கேதீச்சரத் தானே. 06

*(இ-ள்) அடியார் மீது வருந் தீவினைகளை நீக்கியருளு கின்றவர் யாவரென்றால் பூமியை விருத்திசெய்கின்ற கடல்*

சூழ்ந்த மாதோட்டமென்னும் நல்ல ஊரிலுள்ள பாலாவி யென்னுந் தீர்த்தக் கரையிலிருக்கின்ற திருக்கேதீச்சரமென் னும் ஸ்தலத்தில் கௌரியம்பிகையோடு வீற்றிருக்கின்ற சிவந்த சடாமுடியையுடைய சிவபெருமானே. எ - று.

ஊனத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடன் மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்றிருக் கேதீச்சரத் தானே. 07

(இ - ள்) அடியார்கள்மீது வருகின்ற குற்றம் மிகுந்த நோய்களை நீக்கியருளுகின்றவர் யாவரென்றால், வெண்மை யாகிய சங்குகள் மிகுந்து நிறையுங் கடல்சூழ்ந்த மாதோட்ட மென்னும் நல்ல ஊரிலுள்ள பாலாவியென்னுந் தீர்த்தக் கரை யிலிருக்கும் திருக்கேதீச்சரமென்னுந் தலத்திலே பாலுஞ் சுவை மிகுதியை யவாவுஞ் சொற்களையுடைய கௌரியம் பிகையோடு வீற்றிருக்கின்ற பன்றியி னெயிற்றை யணிந்த சிவ பெருமானே. எ - று.

ஒழித்தருளிகள் ஒடுங்கி என்பதுபோற் பெயராய் நின்றன பாலுஞ் சுவைகுன்றுதற் கேதுவாய மொழி யெனினும் அமையும்.

அட்டன்னழ காகவரை தன்மேலரவ வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழின் மாதோட்டநன் னகரிற்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்னமை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே. 08

(இ-ள்) அட்டமூர்த்தியாயுள்ளவரும், மேலானவரும், அழகாகத் திருவரையில் சுத்தமாயை ஆகிய சர்ப்பக் கச்சையணிந்து நம்மையடிமை கொள்பவரும் யாவரென்றால், தேனையுண்டு வண்டுகள் சுழலுகின்ற சோலை சூழ்ந்த மாதோட்டமென்னும் நல்ல ஊரிலுள்ள பாலாவியென்னுந் தீர்த் தக்கரையிலிருக்கும் திருக்கேதீச்சரமென்னும் தலத்திலே கௌரியம்பிகை யென்னும் அருட்சத்தியோடு வீற்றிருக்கின்ற

சிவபெருமானே. எ - று.

மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழின் மாதோட்டநன் னகரிற்
பாவம்வினை யறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்னெனை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே. 09

(இ - ள்) பிரமா விஷ்ணு உருத்திரர் எனவும் சத்திசிவமெனவும் பேசப்படுகின்ற மூன்று கண்களையுடைய தலைவராகிய கடவுளும் என்னை அடிமை கொள்பவரும் யாவரென்றால், மரங்களில் மாங்கனி தூங்குகின்ற சோலை சூழ்ந்த மாதோட்டமென்னும் நல்ல ஊரிலுள்ள இரு வினைகளையுங் கெடுக்கின்ற அடியார் வசிக்கும் பாலாவித் தீர்த்தக்கரையிலிருக்கின்ற திருக்கேதீச்சரமென்னுந் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே. எ - று.

பாவந் தீவினையையும் வினை நல்வினையையும் உணர்த்தின. நற்பயன் கருதாது பசுக்களுக்கும் பரிபக்குவ நிகழச் செய்தது பரமுத்தி சேர்க்குமாறு மூவராயும் இருவராயும் இருந்தாரன்றி அவர்களை இயற்கையன்றென்பார் மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி என்றார்.

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருட்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புக ழூரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே. 10

(இ-ள்) கரியகடலைச் சூழ்ந்த கழிக்கரை பொருந்திய மாதோட்ட மென்னும் நல்ல ஊரிலுள்ள பக்கங்களிற் பொருந்திய சோலைகளில் வண்டுகள் கீதங்களைப் பாடும் திருக்கேதீச்சர மென்னுந் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானைப் பிராமணர்கள் புகழுகின்ற நம்பியாரூரனாகிய திருவடித் தொண்டன் பாடிய குறைவற்ற திருப்பதிகத்தைப் பாராயணஞ் செய்ய அவரைத் தீவினைகள் அடையா. எ - று.
சிறையார் என்னும் அடையை, வண்டிற் கேற்றினு மமையும்.

திருச்சிற்றம்பலம்

பாரதி பதிப்பகம், 430,காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.